அறிவிப்பு

ஹோமாகம பிரதேச சபை

ஹோமாகம பிரதேச சபையில் காணப்படும் அனுமதிக்கப்பட்ட வெற்றிடங்களுக்கு திறந்த ஆட்சேர்ப்பு முறையின் கீழ் தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலக்கம்	பதவி	வெற்றிடம்	சம்பள அளவு	அடிப்படைத் தகைமைகள்
01	சாரதி (III) தரம்	04	PL3-2025 (ரூ42,780/-)	**கல்வித் தகைமைகள் -** க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு சிங்களம் / தமிழ் திறமைச் சித்திகள் இரண்டு(02) உள்ளடங்களாக (06) சித்திகளை பெற்றிருத்தல். (ஒரே தடவையில் குறைந்தபட்சம் (05) பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்க வேண்டும். **தொழில் தகைமை -** 1. தனியார்/வாடகை வாகனம் தார் செப்பனிடும் வாகனம் 24க்கு குறைவான ஸ்டேசன் வெகன் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்களை செலுத்தும் அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல். (சேர்த்துக்கொள்ளப்படும் தினத்திற்கு (03) வருடங்களுக்கு முன்பு குறைந்தபட்சம் "சீ" மற்றும் "சீ1" வாகன வகையின் அனுமதிப்பத்திரம் அல்லது புதிய வாகன அனுமதிப் பத்திரங்களுக்கு அமைவாக "பீ" வகை அனுமதிப் பத்திரத்தை பெற்றிருக்க வேண்டும்.) 02. வீதி ஒழுங்குகள் கட்டளைச் சட்டம் தொடர்பில் சிறந்த தெரிவு இருத்தல் வேண்டும். அனுபவம் - சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டதிலிருந்து குறைந்தபட்சம் (03) வருட அனுபவத்தை கொண்டிருக்க வேண்டும். (அனுபவத்தை உரிய சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்) உடல் தகைமை – குறைந்தபட்சம் (5) அடி உயரம் காலை வேலையிலும் இரவு வேளையிலும் பணிகளில் ஈடுப்படக்கூடியவாறு உடல் ரீதியாக ஆரோக்கியமாக இருப்பதுடன், சிறந்த கண்பார்வை இருத்தல் வேண்டும். அரச வைத்தியர் ஒருவரினால் வழங்கப்பட்ட வைத்திய சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். கவனத்திற்கு - அண்மைய பகுதியில் வசிப்பவர்கள் எனில் சிறந்தது. கனரக வாகனங்கள் / கனரக இயந்திரங்களுடன் பணியாற்றி இருப்பது மேலதிக தகைமையாக கருதப்படும்.
02	சுகாதார பணியாளர் (III) தரம்	04	PL1-2025 (ரூ,40,000/-)	**கல்வித் தலைமை -** 8 வகுப்பு (9 வருடங்கள்) கற்றிருக்க வேண்டும். **தொழில் தகைமை -** கருத்தில் கொள்ளப்படாது **அனுபவம் -** கருத்தில் கொள்ளப்படாது **உடல் தகைமை -** பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு போதிய உடல் மற்றும் உள தகைமைகளை கொண்டிருத்தல்.
03	தகனசாலை செயற்பாட்டாளர் (III) தரம்	01	PL 2- 2025 (ரூ41,800)	**கல்வித் தகைமை -** க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படதவாறு சிங்களம்/ தமிழ் திறமைச் சித்திகள் இரண்டு(02) உள்ளடங்களாக (05) பாடங்களில் ஒரே தடவையில் சித்திகளை பெற்றிருத்தல். **தொழில் தகைமை -** உரிய பதவிக்கு ஏற்றவாறு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வரையறுக்கப் பட்டுள்ளவாறு தேசிய தொழில் தகைமைகளில் குறைந்தபட்சமாக (N.V.Q) இரண்டாம் மட்டத்தை அடைந்திருத்தல் மற்றும் உரிய துறையில் 06 மாதங்களுக்கு குறையாத அனுபவத்தை கொண்டிருத்தல். **அனுபவம் -** கருத்தில் கொள்ளப்படாது. **உடல் தகைமை -** அனைத்து விண்ணப்பதாரர்களும் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு போதிய உடல் மற்றும் உள தகைமைகளை கொண்டிருத்தல்.

பொதுவான நிபந்தனைகள்

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புகளை கொண்டவராக இருத்தல்
- வயது : விண்ணப்பங்கள் ஏற்கப்படும் திகதியில் 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.
- பதிவு : இறுதித் திகதிக்கு முன்பாக குறைந்தபட்சம் 03 வருடங்கள் மேல் மாகாணத்தில் நிலையான பதிவை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பித்தல்

இணைப்பில் உள்ள விண்ணப்பத்துடன் கல்வித் தகைமை சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் (தேவை எனில்), பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட கிராம சேவகர் சான்றிதழ், மற்றும் அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026.11.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கும் வகையில் **"செயலாளர், ஹோமாகம பிரதேச சபை,நீதிமன்ற வீதி,ஹோமாகம"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும். (அரச ஊழியர்கள் தங்களது அலுவலக பிரதானியின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.)

செயலாளர்,
ஹோமாகம பிரதேச சபை
திகதி : 2026.11.17

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED